tnkalvi.online

No. of Printed Pages : **5**

6791

பதிவு எண்

Part III — Vocational Subjects

வேளாண் அறிவியல்

AGRICULTURAL SCIENCE

(தமிழ் வழி / Tamil Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டவர் _____.

(அ) டாக்டர் வர்கீஸ் குரியன் (ஆ) டாக்டர் மா.சு. சுவாமிநாதன்

(இ) நார்மன் எ. போர்லாக் (ஈ) சி. சுப்ரமணியம்

2. ஒரு பெரிய பரப்பில் நிலவிய நீண்டகால சராசரி வானிலை _____ எனப்படும்.

(அ) தட்பவெப்பநிலை (ஆ) நுண் வானிலை

(இ) வெப்பநிலை (ஈ) வானிலை

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

3. இந்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள இடம் :

(அ) போபால் (ஆ) டேராடூன்

(இ) கர்னால் (ஈ) உதகமண்டலம்

4. வாசனைப் பயிர்களின் ராணி :

(அ) மிளகு (ஆ) ஏலக்காய்

(இ) மஞ்சள் (ஈ) ஜாதிக்காய்

5. மழை மூலம் பெறப்பட்ட நிலத்தடி நீரைப் பயன்படுத்தி செய்யப்படும் சாகுபடி :

(அ) புன்செய் சாகுபடி (ஆ) நன்செய் சாகுபடி

(இ) தோட்டக்கால் சாகுபடி (ஈ) மானாவாரி சாகுபடி

6. உழும் போது கொழு மண்ணைக் கீறி 'V' வடிவ சால்களை ஏற்படுத்தும் முதன்மை உழவுக் கருவி :

(அ) சட்டிக் கலப்பை (ஆ) நாட்டுக் கலப்பை

(இ) உளிக் கலப்பை (ஈ) இரும்பு இறக்கைக் கலப்பை

7. அடுத்த தலைமுறையை உருவாக்கும் கருவுற்ற முதிர்ந்த சூலகம் _____.

(அ) நாற்று (ஆ) தானியம்

(இ) சூல் பை (ஈ) விதை

8. வட்டப்பாத்திப் பாசனம் _____ பயிருக்கு ஏற்றது.

(அ) தென்னை (ஆ) பருத்தி

(இ) கரும்பு (ஈ) நெல்

9. _____ நேரடி உரமாகும்.

(அ) திரவ உயிர் உரங்கள்

(ஆ) யூரியா

(இ) டை அமோனியம் பாஸ்பேட்

(ஈ) யூரியா + டை அமோனியம் பாஸ்பேட்

10. களைகளை எரிப்பதால் நிலத்திற்கு _____ கிடைக்கிறது.

(அ) நுண்ணூட்டச் சத்து (ஆ) மணிச் சத்து

(இ) சாம்பல் சத்து (ஈ) தழைச் சத்து

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. நெகிழிப் பூச்சு செய்யப்பட்ட மருந்து _____.
(அ) ஜிப்சம் (ஆ) பெய்கான் பெய்ட்ஸ்
(இ) சிஸ்மிக் CS (ஈ) ஃபிப்ரோனில் 0.3% G

12. _____ நோய் தாக்கியதால் 1943 -ஆம் ஆண்டு இந்தியாவில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது.
(அ) நெல் பாக்டீரியா இலைக்கருகல் (ஆ) நெல் செம்புள்ளி
(இ) சாம்பல் (ஈ) நெல் இலைப்புள்ளி

13. விதையில்லாக் கனிகளை உருவாக்க _____ உதவுகிறது.
(அ) எத்திலின் (ஆ) ஆக்ஸின்
(இ) வளர்ச்சி தடுப்பான் (ஈ) ஜிபரலின்

14. _____, காணொலி வடிவம் சார்ந்த விரிவாக்க கல்வி முறை ஆகும்.
(அ) ஒலி பெருக்கி (ஆ) தனி நபர்
(இ) புகைப்படம் (ஈ) வானொலி

15. மீன் வளர்ப்பில் _____ என்பது புதிய தொழில்நுட்பம் ஆகும்.
(அ) பயோஃபிளாக் தொழில் நுட்பம்
(ஆ) அலங்கார மீன் வளர்ப்பு
(இ) நன்னீர் மீன் வளர்ப்பு
(ஈ) கூட்டின மீன் வளர்ப்பு

பகுதி - II

குறிப்பு : ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

16. பசுமைப்புரட்சி என்றால் என்ன ?

17. பேரிடர் மேலாண்மை என்றால் என்ன ?

18. அமில மண்ணை எவ்வாறு சீர்திருத்தலாம் ?

19. பண்படுத்தலின் வகைகளை எழுதுக.

20. பூஞ்சை, பாக்டீரியா மற்றும் நச்சுயிரி தாக்கப்பட்ட விதைகளை கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும் சோதனை முறைகள் யாவை ?

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

21. நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை எழுதுக.

22. பொட்டாசியத்தின் முக்கியத்துவம் என்ன ?

23. ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடு என்றால் என்ன ?

24. எண்டெமிக் பூச்சிகள் என்றால் என்ன ?

25. அலங்காரத் தாவரங்களைத் தாக்கும் நோய்கள் மூன்றினைக் கூறுக.

26. நிகர வருமானத்தை எவ்வாறு கணக்கிடலாம் ?

27. துடுப்பு மற்றும் வால் அழுகல் நோயின் அறிகுறிகள் யாவை ?

28. சிறு மற்றும் குறு தானியங்களை உட்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

பகுதி - III

குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

29. வானிலை முன்னறிவிப்பின் முக்கியத்துவத்தை விளக்குக.

30. மண்ணின் பணிகளைக் குறிப்பிடுக.

31. இயந்திரமயமாதலின் அவசியம் என்ன ?

32. குறிப்பு வரைக :

(a) முழு உருமாற்றம்

(b) குறை உருமாற்றம்

33. இரசாயன மற்றும் சட்டமுறை நோய்க் கட்டுப்பாடு பற்றி எழுதுக.

34. மதிப்பூட்டப்பட்ட மீன் உணவுகளை எழுதுக.

35. விதைக்கும்போதும் நடவு செய்யும்போதும் கவனிக்க வேண்டிய அம்சங்கள் யாவை ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **இரண்டு பக்க அளவில்** விடையளிக்கவும். **2x10=20**

36. (அ) வேளாண்மை ஆராய்ச்சிக் குழுமம் மற்றும் பல்கலைக்கழகம் பற்றி விவரிக்கவும்.

அல்லது

(ஆ) விதை உறக்க நிலை நீக்குதல் பற்றி விளக்குக.

37. (அ) பயிர்களில் நோய்களை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகளைப் பற்றி விவரிக்கவும்.

அல்லது

(ஆ) விவசாயிகளுக்கான அரசு திட்டங்கள் மற்றும் கூட்டுப் பண்ணையம் பற்றி விளக்குக.

- o O o -

tnkalvi.online

tnkalvi.online